**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 115/2023**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 16.11.2023**

| | |
|---|---|
| **Name : சதீஸ்குமார்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பானாபுரத்தில் குடியிருந்து ஜேசிபி ஓட்டுநராக வேலை செய்கிறேன். கடந்த 2016-ம் வருடத்தில் சுமார் மாலை 4 மணியளவில் விநாயகர் சதுர்த்தி தினத்தன்று சிலையை கரைத்துவிட்டு பிறகு நான் மற்றும் சிலர் பிக்பப் வேனில் வந்து கொண்டிருந்தபோது, உப்புப்பள்ளத்திற்கு அருகே மயில்சாமி என்பவர் வண்டியில் மெதுவாக வந்துகொண்டிருந்தபோது, வளைவில் வண்டியில் இருந்த நபர்கள் ஒருபுறமாக செல்லும் சமயத்தில் வண்டி இடது பக்கமாக கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது.

2) விபத்தின் காரணமாக எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது. காயம்பட்ட நான் சேலம் நியூரோ பவுண்டேசன் மருத்துவமனைக்கு சென்று ஒரு வாரம் சிகிச்சையில் இருந்தேன். மேற்படி விபத்தில் 2 நபர்கள் இறந்துவிட்டனர். விபத்தின் காரணமாக சுமார் 20 நபர்களுக்கு காயம் ஏற்பட்டது. வாகனத்தை ஓட்டிச்சென்றவர் ஆஜர் எதிரி ஓட்டுநர் மயில்சாமி என்று சாட்சி அடையாளம் காட்டினார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

3) ஒருநபரை ஏற்றுவதற்காக நாங்கள் கேட்டபோது டிரைவர் ஏற்றவேண்டாம்

என்று சொன்னார் என்றால் சரிதான். மயில்சாமி மெதுவாகனத்தான் வாகனத்தை ஓட்டினார் என்றால் சரிதான். விபத்து உப்புப்பள்ளத்திற்கு மேலே செல்லும் போது மெதுவாகத்தான் சென்றது என்றால் சரிதான். என்ன காரணத்திற்காக அனைவரும் இடது புறம் ஒன்று சேர்ந்தோம் என்றால் சரவணன் என்ற உறவினரை பார்த்தவுடன் ஓடிக்கொண்டிருந்த வண்டியில் இருந்து கீழே குதித்தார் அதை பார்க்கவேண்டி நாங்கள் அனைவரும் வண்டியின் இடது பக்கம் சென்றோம்.

4) நாங்கள் அனைவரும் இடதுபுறம் சென்றதால் தான் வண்டி கழிந்தது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 115/2023**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 16.11.2023**

| | |
|---|---|
| **Name : நந்தகுமார்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் எறகுண்டபட்டியில் குடியிருந்து லாரி ஓட்டுநராக வேலை செய்கிறேன். கடந்த 05.09.2016–ம் தேதி சுமார் மாலை 4 மணியளவில் விநாயகர் சதுர்த்தி தினத்தன்று சிலையை கரைத்துவிட்டு பிறகு நான் மற்றும் 20 நபர்கள் பொலிரோ பிக்கப் வேனில் வந்து கொண்டிருந்தபோது, மேச்சேரி – கூணாண்டியூர் செல்லும் சாலையில் உப்புப்பள்ளத்திற்கு அருகே ஆஜர் எதிரி மயில்சாமி என்பவர் வண்டியை ஓட்டிச்சென்றபோது, வளைவில் வண்டியில் இருந்த நபர்கள் ஒருபுறமாக செல்லும் சமயத்தில் வண்டி இடது பக்கமாக கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது.

2) விபத்தின் காரணமாக எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது. காயம்பட்ட நான் சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்று சிசிச்சை பெற்றேன். மேற்படி விபத்தில் 2 நபர்கள் இறந்துவிட்டனர். விபத்தின் காரணமாக சுமார் 20 நபர்களுக்கு காயம் ஏற்பட்டது. வாகனத்தை ஓட்டிச்சென்றவர் ஆஜர் எதிரி ஓட்டுநர் மயில்சாமி என்று சாட்சி அடையாளம் காட்டினார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3) ஒருநபரை ஏற்றுவதற்காக நாங்கள் கேட்டபோது டிரைவர் ஏற்றவேண்டாம் என்று சொன்னார் என்றால் சரிதான். மயில்சாமி மெதுவாகனத்தான் வாகனத்தை ஓட்டினார் என்றால் சரிதான். என்ன காரணத்திற்காக அனைவரும் இடது புறம் ஒன்று சேர்ந்தோம் என்றால் சரவணன் என்ற உறவினரை பார்த்தவுடன் ஓடிக்கொண்டிருந்த வண்டியில் இருந்து கீழே குதித்தார் என்றால் சரிதான். அதை பார்க்கவேண்டி நாங்கள் அனைவரும் வண்டியின் இடது பக்கம் சென்றோம். விபத்து உப்புப்பள்ளத்திற்கு மேலே செல்லும் போது மெதுவாகத்தான் சென்றது என்றால் சரிதான். நாங்கள் அனைவரும் இடதுபுறம் சென்றதால் தான் வண்டி கழிந்தது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டுர்.**

**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.II, Mettur**
**Case No : C.C. 115/2023**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 16.11.2023**

| | |
|---|---|
| **Name : சங்கர்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் பானாபுரத்தில் குடியிருந்து நெசவு வேலை செய்கிறேன். கடந்த 05.09.2016–ம் தேதி சுமார் மாலை 4 மணியளவில் விநாயகர் சதுர்த்தி தினத்தன்று சிலையை கரைத்துவிட்டு பிறகு நான் மற்றும் 20 நபர்கள் பொலிரோ பிக்கப் வேனில் வந்து கொண்டிருந்தபோது, மேச்சேரி – கூணாண்டியூர் செல்லும் சாலையில் உப்புப்பள்ளத்திற்கு அருகே ஆஜர் எதிரி மயில்சாமி என்பவர் வண்டியை ஓட்டிச்சென்றபோது, வளைவில் வண்டியில் இருந்த நபர்கள் ஒருபுறமாக செல்லும் சமயத்தில் வண்டி இடது பக்கமாக கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது.

2) விபத்தின் காரணமாக எனக்கு தலை, தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. காயம்பட்ட நான் சேலம் குறிஞ்சி மருத்துவமனைக்கு சென்று 1 மாத காலம் உள்நோயாளியாக இருந்து சிசிச்சை பெற்றேன். மேற்படி விபத்தில் 2 நபர்கள் இறந்துவிட்டனர். விபத்தின் காரணமாக சுமார் 20 நபர்களுக்கு காயம் ஏற்பட்டது. வாகனத்தை ஓட்டிச்சென்றவர் ஆஜர் எதிரி ஓட்டுநர் மயில்சாமி என்று சாட்சி அடையாளம் காட்டினார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3) குப்பலாக நாங்கள் ஏறச்செல்லும் போது டிரைவர் ஏற்றவேண்டாம் என்று சொன்னார் என்றால் சரிதான். சரவணன் என்ற உறவினரை பார்த்தவுடன் ஓடிக்கொண்டிருந்த வண்டியில் இருந்து கீழே குதித்தார் என்றால் சரிதான். என்ன காரணத்திற்காக அனைவரும் இடது புறம் ஒன்று சேர்ந்தோம் என்றால் அதை பார்க்கவேண்டி நாங்கள் அனைவரும் வண்டியின் இடது பக்கம் சென்றோம் என்றால் சரிதான். நாங்கள் அனைவரும் இடதுபுறம் சென்றதால் தான் வண்டி கழிந்தது என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/–தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**